**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 03 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட கலிபவுசர் சேவைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 81,150 தொகையான வருமானம், ஆண்டின் வருமானத்திலிருந்தும் வருமானக் கடன்பட்டோரிடமிருந்தும் கைவிடப்பட்டிருந்தது. எதிர்வரும் வருடத்தில் கலிபவுசர் சேவையினை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 8,100 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் வீதி விளக்கு பராமரிப்பிற்காக இலங்கை மின்சார சபையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 464,496 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் நிலுவையாக இருந்த ஏனைய வருமானத்தின் கீழ் அது ரூபா 100,953 ஆக ரூபா 363,543 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட இறுதியிருப்பிற்கும் இருப்புப் பதிவேட்டில் காணப்பட்ட மீதிக்குமிடையே ரூபா 16,415 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

ரூபா 136,987,770 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பதிவேடு, பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,458,658 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,464,900 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 2,013 | 3,580 | 3,718 |
| ii. | வாடகை | 14,825 | 14,942 | 913 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,106 | 2,044 | 428 |
| iv. | ஏனைய வருமானம் | 44,423 | 39,666 | 71,566 |

#### 2.2.2 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 3,717,831 ஆக இருந்ததுடன் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை மீதியில் நீண்ட காலம் முதல் கொடுப்பனவுகளைப் புறக்கணித்த 24 ஆதன வரி அலகுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 813,359 ஆக இருந்தது.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 84,790 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 427,860 ஆக இருந்ததுடன் நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

(அ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டணம் அறவிடமுடியுமான அறிவித்தல் பதாதை தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்காக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 திசெம்பர் 07 ஆந் திகதிய வாத்தமானி அறிவித்தலின் படி நிலையான அறிவித்தல் பதாதைக்காக சதுர அடியொன்றுக்கு ரூபா 150 தொகையொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும் சதுர அடியொன்றுக்கு ரூபா 100 வீதம் தனியார் கம்பனியொன்றின் அறிவித்தல் பதாதைக்காக கட்டண அறவிடப்பட்டமையால் ரூபா 76,850 நிதி நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(iii) சபையினால் பாரியளவான கட்டணம் அறவிடமுடியுமான தொலைத்தொடர்பு மற்றும் ஏனைய கம்பனிகளின் அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலி பவுசர் வருமானம்

------------------------------------

சபைக்குரிய கலி பவுசரை சேவையில் ஈடுபடுத்துவதற்காக மூன்று நிறுவனங்களிலிருந்து ஆண்டின் இறுதியில் ரூபா 159,600 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 151,600 தொகை 2012 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய தொகையாகும்.

(இ) நிலுவை இயந்திர உபகரண வருமானம்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் சபையினால் ஒப்பந்தக்காரருக்கும் வெளி நபர்களுக்கும் மோட்டார் கிறேடர், பெகோலோடர் மற்றும் வீல்லோடர் என்பவற்றை வழங்குவதற்காக அறவிட வேண்டிய இயந்திர உபகரண வருமானம் ரூபா 1,558,090 ஆகும். அதில் ரூபா 97,260 தொகையொன்று முன்னைய ஆண்டின் இயந்திர உபகரண வழங்கலுக்காக அறவிட வேண்டியிருந்த மீதியாக இருந்ததுடன், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இந்த நிலுவையை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**------------------------------------------------------------------------------------------**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 12,667,120 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**-----------------------------------**

### 3.1 செயலாற்றல்

**---------------------**

2013 ஆம் ஆண்டில் தென் மாகாண சபை உறுப்பினர்களின் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 225,000 தொகையான 03 உத்தேச வேலைகளும், மகநெகும நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 2,000,000 தொகையான 04 வேலைகளும், சபை நிதியத்திலிருந்து ரூபா 4,035,000 தொகையான 02 வேலைகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் II ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் பிரிவின் படி நியமனக் கடிதம் இன்றியும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 201 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகவும் 2013 ஆம் ஆண்டில் இரண்டு ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 707,090 தொகையொன்று சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த ஊழியர்களுக்காக சேமலாப நிதியத்திற்காக பங்களிப்புப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 1994 யூன் 17 ஆந் திகதிய 23/94 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி வைத்தியத் தொழில் தவிர 45 வயதை விஞ்சுகின்ற நபர்கள் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்பட முடியாத போதிலும் அதற்கு முரணாக இந்த ஊழியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

-----------------------------------------------------

1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபை (திட்டமிடலும் கட்டிடமும்) கட்டளை இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டதன் படி சபையினால் நிர்மாண நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட 170 கட்டிட திட்டங்களுக்காக நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொண்டு தகைமைச் சான்றிதழ் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

-----------------------------------------

சபையானது இல 53–5712 கெப் வண்டி, இல 49-0993 போர்ட் டெக்ரர் மற்றும் இலக்கம் 41-6894 லொறி பவுசர் என்பவற்றை பாவனைக்கு எடுக்காது நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. அந்த சொத்துக்கள் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் படி கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எலே கொட கிழக்கு பெமினியன்வில ஸ்ரீ சுமன மாவத்தைக்கு கொங்ரீட் கற்கள் இட்டு அமைத்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு இந்த வேலையைக் கையளித்து நிறைவேற்றி ரூபா 499,732 வேலை பெறுமதியுடன் பட்டியல் தயாரித்து மீளளிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.

i. 1:2:4 சீமெந்து, மணல், கல் கலவையில் 4 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் கொங்கிரீட் தட்டை தயாரிப்பதற்காக 170 மீற்றர் நீளத்திற்காக ரூபா 440 வீதம் ரூபா 74,800 தொகையொன்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் சில இடங்களில் 2013 திசெம்பர் 13 ஆந் திகதி பரிசோதனை செய்த போது கொங்கிரீட் தட்டின் உயரம் பின்வருமாறு இருந்தன.

* முதலாவது இடம் -- 4 அங்குலம்
* இரண்டாவது இடம் - 4 அங்குலம்
* மூன்றாவது இடம் - 5 அங்குலம்
* நான்காவது இடம் - 4½ அங்குலம்

ii. மேற்கூறப்பட்ட இலக்கம் i இல் குறிப்பிடப்பட்டதன் படி வீதியின் இரு பக்கங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கொங்கிரீட் தட்டின் சராசரியான உயரம் 4.4 அங்குலத்திற்கு அண்ணளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 09 அங்குலத்திற்காக கொடுப்பனவு செய்வதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டமையினால் ரூபா 38,231 தொகை மேலதிக பட்டியல்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. நல்ல நிலையில் கிரவல் போடப்பட்டு செப்பனிடுவதற்காக தடிப்பமாவதற்கு 5.7 கன மீற்றருக்காக ரூபா 4,802 தொகை செலுத்துவதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வீதியின் ஓரங்களுக்கு கிரவல் போடப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனையின் போது இந்த வீதிக்காக கிரவல் போடும்

தேவையொன்று இல்லாதிருந்தமையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உரிய மேற்பார்வையின்றி பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. 9 அங்குல உயரத்திற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய கொங்கிரீட் தட்டு அதன்படி நிர்மாணிக்கப்படாமையினால் அந்த கொங்கிரீட் தட்டுக்களின் பலம் மற்றும் காலாவதியாகுதல் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) எலேகொட கிழக்கு ஸ்ரீ மஹீரத்ன மாவத்தைக்கு கொங்ரீட் கற்கள் இட்டு அமைத்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு இந்த வேலையைக் கையளித்து நிறைவேற்றி ரூபா 498,579 வேலை பெறுமதியுடன் பட்டியல் தயாரித்து மீளளிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.

i. 1:2:4 சீமெந்து, மணல், கல் கலவையில் 04 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் கொங்கிரீட் தட்டை தயாரிப்பதற்காக 144 மீற்றர் நீளத்திற்காக ரூபா 440 வீதம் ரூபா 63,360 தொகையொன்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் சில இடங்களில் 2013 திசெம்பர் 13 ஆந் திகதி பரிசோதனை செய்த போது கொங்கிரீட் தட்டின் உயரம் பின்வருமாறு இருந்தன.

* முதலாவது இடம் -- 3.75 அங்குலம்
* இரண்டாவது இடம் - 3.8 அங்குலம்
* மூன்றாவது இடம் - 3.5 அங்குலம்
* நான்காவது இடம் - 4 அங்குலம்

ii. மேற்கூறப்பட்ட இலக்கம் i இல் குறிப்பிடப்பட்டதன் படி வீதியின் இரு பக்கங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கொங்கிரீட் தட்டின் சராசரியான உயரம் 3.8 அங்குலத்திற்கு அண்ணளவாக இருந்தமை 2013 திசெம்பர் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டதுடன் 09 அங்குலத்திற்காக

கொடுப்பனவு செய்வதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டமையினால் ரூபா 36,608 தொகை மேலதிக பட்டியல்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. நல்ல நிலையில் கிரவல் போடப்பட்டு செப்பனிடுவதற்காக தடிப்பமாவதற்கு 4.8 கன மீற்றருக்காக ரூபா 4,044 தொகை செலுத்துவதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வீதியின் ஓரங்களுக்கு கிரவல் போடப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனையின் போது இந்த வீதிக்காக கிரவல் போடும் தேவையொன்று இல்லாதிருந்தமையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உரிய மேற்பார்வையின்றி பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. 9 அங்குல உயரத்திற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய கொங்கிரீட் தட்டு அதன்படி நிர்மாணிக்கப்படாமையினால் அந்த கொங்கிரீட் தட்டுக்களின் பலம் மற்றும் காலாவதியாகுதல் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**(இ) எலேகொட கிழக்கு ஹறஸ்வெவ கொங்ரீட் கற்கள் இட்டு அமைத்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு இந்த வேலையைக் கையளித்து நிறைவேற்றி ரூபா 499,732 வேலை பெறுமதியுடன் பட்டியல் தயாரித்து மீளளிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.

i. 1:2:4 சீமெந்து, மணல், கல் கலவையில் 04 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் கொங்கிரீட் தட்டை தயாரிப்பதற்காக 170 மீற்றர் நீளத்திற்காக ரூபா 440 வீதம் ரூபா 74,800 தொகையொன்று பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் சில இடங்களில் பரிசோதனை செய்த போது கொங்கிரீட் தட்டின் உயரம் பின்வருமாறு இருந்தன.

* முதலாவது இடம் -- 5 அங்குலம்
* இரண்டாவது இடம் - 3 அங்குலம்
* மூன்றாவது இடம் - 4 அங்குலம்
* நான்காவது இடம் - 4 அங்குலம்

ii. மேற்கூறப்பட்ட இலக்கம் i இல் குறிப்பிடப்பட்டதன் படி வீதியின் இரு பக்கங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கொங்கிரீட் தட்டின் சராசரியான உயரம் 4 அங்குலத்திற்கு அண்ணளவாக இருந்தமை 2013 திசெம்பர் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டதுடன் 09 அங்குலத்திற்காக கொடுப்பனவு செய்வதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டமையினால் ரூபா 41,555 தொகை மேலதிக பட்டியல்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நல்ல நிலையில் கிரவல் போடப்பட்டு செப்பனிடுவதற்காக தடிப்பமாவதற்கு 5.7 கன மீற்றருக்காக ரூபா 4,802 தொகை செலுத்துவதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வீதியின் ஓரங்களுக்கு கிரவல் போடப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனையின் போது இந்த வீதிக்காக கிரவல் போடும் தேவையொன்று இல்லாதிருந்தமையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உரிய மேற்பார்வையின்றி பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. 9 அங்குல உயரத்திற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய கொங்கிரீட் தட்டு அதன்படி நிர்மாணிக்கப்படாமையினால் அந்த கொங்கிரீட் தட்டுக்களின் பலம் மற்றும் காலாவதியாகுதல் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தகைமைப் பரிசோதனை அறிக்கைக்காக மேலதிகமாகக் கொடுப்பனவு செய்தல்**

---

மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொங்கிரீட் சிறு கற்கள் இட்டு அமைக்கப்பட்ட வீதிகளில் சிறுகற்களின் நிலைமை தொடர்பான பரிசோதனையின் போது 2012 ஆம் ஆண்டில் 20 கொங்கிரீட் கற்களின் பரிசோதனைக்காக ரூபா 11,000 முதல் ரூபா 12,500 வரையான வீச்சில் பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் 09 இற்கும் 10 இற்கும் மிடையிலான கொங்கிரீட் கற்களின் பரிசோதனைக்காக ரூபா 12,000 இற்கும் ரூபா 12,500 இற்குமிடையேயான அளவில் 26 வேலைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக பட்டியல் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 4 வேலைகளுக்காக ரூபா 12,500 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உள்ளூராட்சித் திணைக்களத்தின் பரிசோதனைக் கூடத்தினால் ஒரு கொங்கிரீட் கல்லொன்றின் பரீட்சிப்பதற்காக அறவிடப்பட்ட பணம் ரூபா 600 ஆக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் ஒரு

கொங்கிரீட் கல்லின் பரிசோதனைக்காக ரூபா 1,250 முதல் ரூபா 1,388 வரையான வீச்சிலான தொகை பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன்படி மேலதிகமாக பட்டியல்படுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 195,400 ஆகும்.

**(உ) நிதி மீளளிப்புச் செய்வதற்கு முன் வேலைக்காக சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்**

---

துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியேற்பாட்டையும் மாகாண குறித்த அபிவிருத்தி நிதியேற்பாட்டையும் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்டிருந்த வேலைக்காக பட்டியல் தயாரித்து மீளளிப்பிற்காக அனுப்பியதன் பின்னர் அந்தப் பணம் கிடைப்பதற்கு முன் ஒப்பந்தக்காரருக்காக ரூபா 671,582 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்தத் தொகையில் ரூபா 271,582 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.6 சபையின் உறுப்பினர்களுக்காக எரிபொருள் வழங்குதல்**

---

சபையின் உறுப்பினர்களுக்காக வெளித்தரப்பினர்களிடமிருந்து இயந்திர உபகரணங்களைப் பெற்று சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சபை நிதியத்திலிருந்து எரிபொருள் (டீசல்) 4449 லீற்றர் கொள்வனவிற்காக ரூபா 533,510 தொகையொன்று செலவிடப்பட்டுமிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 219(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது பிரதேசமொன்றில் சபையின் உறுப்பினரொருவர் அல்லது ஊழியர்களுக்கு பிரதேச சபையுடன் ஏற்படுத்தப்பட்ட அல்லது செயற்பாட்டிலுள்ள ஏதாவது உடன்படிக்கை அல்லது வேலையொன்று தொடர்பாக அல்லது நிதி தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்க முடியாதிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக இந்த எரிபொருள் அளவிற்குரிய கட்டளைகள் உறுப்பினர்களினால் கையொப்பமிட்டு கையேற்கப்பட்டிருந்தது. அந்தந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் அளவில் வீதி மீளமைப்பு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டமை தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) மனித வள முகாமைத்துவம்

(உ) வாகன நிர்வாகம்